762



762
3.19
OF THE ... 25 AUG 19..

ஸ்ரீரங்கநாதர் துணை.

தண்டகாருண்யவனமென்னும் திருக்கண்ணபுரத்தில்
திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் பேரில்

பக்திரச அருள்வாக்கு பதங்கள்.

(முதற்பாகம்)

இஃது இராமநாதபுரம் ஜில்லா, கண்டியூர்,
ரெங்கதாஸர் என்னும்

ER. மகாலிங்கம்

இயற்றியதை

நாகூர், வெத்திலைக்கடை
ம. வீரப்ப பிள்ளை அவர்களால்,
நாகபட்டணம் ஸ்காட்டிஷ் பிராஞ்சு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது 19-375.

இதன் விலை, அணா 4.

1919.

ஹரிஓம்

ஸ்ரீரங்கநாதர் துணை.

தண்டகாருண்யவனமென்னும் திருக்கண்ணபுரத்தில்

திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் பேரில்

பக்திரச அருள்வாக்கு பதங்கள்.

முதற்பாகம்

இஃது

இராமநாதபுரம் ஜில்லா, கண்டியூர்

ரெங்கதாஸர் என்னும்

ER. மகாலிங்கம்

இயற்றியதை

நாகூர், வெத்திலைகடை

ம. வீரப்பபிள்ளை அவர்களால்,

நாகபட்டணம் ஸ்காட்டிஷ் பிராஞ்சு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை, அணா 4.

1919.

முக்கிய கவனிப்பு.

பக்தஜன வித்வ சிரோன்மணிகளாகிய அன்பார்ந்த நண்பர்காள் :—

இந்த பக்திரஸ அருள்வாக்கு பதங்களை ஸ்ரிஓம் ஸ்ரீரெங்க நாதனுடைய அருளைக்கொண்டும நாகூர் வெத்திலை வியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ ம. வீரப்பிள்ளை அவர்கள் நன் முயர்ச்சியைக் கொண்டும் சிற்றறிவுடைய என்னால் இயற்றப்பெற்றதேயாயினும் இலக்கியவிலக்கண மென்பன சிறிதுங் கற்றறிந்திலேன். நம் இந்திய மதாபியானம் நழுவாதிருக்குமாறும் கீதாபோதகாயனங் கண்ணபிரான் பஜனை மடங்களில் பாடித் துதித்தற்பொருட்டிதனை எம்போன்ற இளைஞர்கள் இதயகமலங்களில் ஸமர்ப்பிக்கலாயினேன்.

அடியேன்,
ரேங்கதாசரேன்னும்,
ER. மகாலிங்கம்

நாகூர் பேத்தபெருமாள் சாமியாரால் இயற்றிய

சாற்றுக்கவி

எழுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கண்ணகன்ஞால முண்டுமிழ் கமலக்கண்ணன்
வீற்றருள் செயுமாதிக்
கண்ணமாபுரிக்கோர் கருத்துயர் கவியின்
கண்ணளித்தனன் சுவைகனிபோல்
பண்ணமாகீதங் கீர்த்தனைவழி.விற்
பத்திசேரருள் ரசவாக்கால்
பண்ணிடும் புலமைத்திறமையிற் சிரந்த
பாவலன் கருத்துளன் மாதோ

நேரிசை வெண்பா

பொன்கொண்டொளி மிகுத்தார்போதறிஞர் வாழ்சயிலத்
தென்கண்டியூர் இருளையாதெளிந்து—முன்கொண்ட
தந்தவத்தில்வந்த ரெங்கதாசன் மகாலிங்கமெனுஞ்
சுந்தரஞ்சேர் வாக்குடையான் சொல்

உ

திருக்குடந்தையைச் சார்ந்த திம்மையப்பதி

ஸ்ரீ. நாராயணசாமி தாஸராலியற்றிய

சா ற் று க வி.

விருத்தம்.

இலகுமணிசடை முடியுமமுத மின்னும்
பிறையணிந்த செங்கோலாற
மினியதவ குலத்துதித்த மிருபாலவிஞ்சை
மிசைபாடு நாவலனுந்
திலதமெனவிளங்கு மகாலிங்க ரெங்க
தீறகவி சிங்கபூபன்
திருஉருவா மோருருவா யமைக்தபுத்தேள்
திருக்கண்ணபுர நகர்வாழ்
வலசைமிகு கண்ணபுறத் தம்மைபுல்லும்
மாதவன்மேல் பாக்கள்வாழி
வமுதநலரஸ முறளி பொருந்தக்கீதம்
பாடி லீலைபெருகதேவ
கமலதிருதாளடியை மறவா நேஸ
கள்வர்குலத்துதித்த பாலன்
கருணையுடன் மொழிந்ததுதி முற்றுமின்பக்
கண்ணனருள் வயாங்குமாதே.

பின்முடுக்கு வெண்பா.

நன்மையுருநண்பர்களே நாரணனின் கீர்த்தனையை
இன்பமுற நாள்தோறும்பாடி—துன்பமற
பத்தியாக ரெங்கனை துதித்துவேண்டி வித்தரைமேல்
சத்தியமாய் முத்திவாய்க்கும் பார்.

உ

ஹரிஓம்.

ஸ்ரீரெங்கநாதன் துணை.

தண்டகாருண்யவனமென்னும் திருக்கண்ணபுரத்தில்

திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீசௌரிராஜப்பெருமாள் பேரில்

பக்திரச அருள்வாக்கு பதங்கள்.

வெண்பா.

அம்பிகையின் சுதனே அரனார் திருமகனே
தும்பிக்கை யுள்ளதூயனே—நம்பியுனை
திருக்கண்ண புரஞ்சௌரி தீரன்மேல் பதம்பாட
திருவாய்மலர்ந்தருள் காப்பு.

விநாயகர் துதி.

2. தக்கபாரங்கல்லைதூக்கி என்ற மெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

1. கஜமுககண நாதா—கருணைபுரிகுவாய் நீதா திரு
கண்ணன் சௌரிராஜன்—மேல் கவிபாடவரம் தாதா (கஜ)

2. வேலவனுக்கனு கூலா—விநாயகற்றும்பீசன் பாலா உன்
நேசர்களுக்கனு கூலா—நின் பாதம்மறவேனாதி மூலா (கஜ)

3. கந்தனுக்குமுன் பிறந்த—கணபதியேநீ சொந்த உன்
மைந்தனைபோலெனைகார்க்க-ஸ்ரீமாயவன்கதையான் சேர்க்க

4. வந்துதவிதரு வாயே-வரமெனக்களிப் பாயே ரெங்க
தாசன்மகாலிங்கம் போற்றும்—சுவாமிசத்திகணபதி சாற்றும்

3. சரஸ்வதி துதி.

சோமசேகரனருளும் பாலா வேலா என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

அன்னை சரஸ்வதியேயுனை—அண்டி—யண்டி நான்
ஆவலுடன் ஓடிவந்தேன்—வேண்டி—வேண்டி (அ)

சரணம்.

1. தாமரைபூவிலுதித்த—தாயே—தாயே உனை
தஞ்சமென்றடைந்தேனருள்—தாயே—நீயே
கோமளசரஸ்வதியே—எந்தன்—நாவில்
கோகிலமே வீற்றிருப்பாய்—நீயே—வாயே (அ)

2. அன்னையேயுந்தனையானும்—நம்பி—நம்பி நான்
அலைந்துவாடுரேனேநிதம்—வெம்பி—வெம்பி
அன்பர்கள்போற்றிக்கொண்டாடும்—காமி—வாமி
அடியேன்மகாலிங்கதாஸன்—க்ஷேமி—பூமி (அ)

---

4. சுப்பிரமணியர் துதி.

சப்தகலந்தரு பணு தனு என்றமெட்டு.

இந்துஸ்தான் பியாக்கு தாளம் ஆதி.

திருச்சிக்கல்தனில் வாழும் சிங்கார வேலனே
திருவடிபணிந்தேன் ஆளனை லோலனே
தினமும் உனைத்துதித்தேன் சீர்பாதம் நம்பினேன்
தீரனே சூர சங்காரனே

திங்களணிசங்கரனே வள்ளி லோலனே
திரு மங்கை தெய்வானையுடனே வாழ்வோனே
ஸ்ரீ ரெங்க தாசன்மகா லிங்கம் நேசனே (தி)

5. மாரியம்மன் துதி.

அம்பாள் மதுரைமீனாக்ஷி என்ற மெட்டு.

இராகம். தேசிகதோடி தாளம் ஆதி.

1. திருக்—கண்ணபுரம் மாரியம்மா—என்
கவலை தீர்ப்பாய் யம்மா உத்தன்
காலடிபணிந்தேன் னம்மா
கருணைபுரி யம்மா—காத்தருள்வாய் யம்மா (திரு)

2. வடக்கு—ஊர் வீதியிலே தாயே—நீ
உத்தமியே காவல் கொண்டாயே—என்
ஊழ்வினை யகற்று வாயே
ஒருமைபட நீயே—சிறுவனுக்கு தாயே (திரு)

3. அம்மா—மாயிமக மாயி நீயே மணி
மந்தர சேகரி தாயே காத்த
மகிழ்பனை பெற்ற நீயே
வரமருளுவாயே—திரமுடனே நீயே (திரு)

4. மகிழ்ச்சியாய் காணுந்தனைத் தேடி—தாசன்
மகாலிங்கம் கீதம் பாடி வந்தேனே
மானிலத்தில் காடி
தேசிகதோடி பாடி—கண்ணபுரம் காடி (திரு)

---

6. அனுமார் துதி.

தல்கு மாரேத்து ரேதுவானு என்றமெட்டு.

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி.

பல்லவி.

சுவாமி—அனுமானே உன்னையான்
அண்டிவந்தேனே சுவாமி (அ)

அனுபல்லவி.

அண்டிவந்தேனே தொண்டுசெய்தேனே
சென்டெடன்றானே சுவாமி (அ)

சரணங்கள்.

1. அய்யனே மெய்யனே ஆதரித்திடும் துய்யனே
மெய்யாகவே உத்தனை வேண்டினேனே சீமானே (அ)

2. இராமசுவாமிதூதனாய் இராக்கதரைக்கொன்றோனே
இராவணேஸ்வரன்கோட்டையில்லைமுடன்தீயிட்டோனே
3. சீதையிடம்கணையாழியை சீக்கிரமாய்யளித்தோனே
சிரஞ்சீவியாகப்பட்டம் சீதைவரம்பெற்றோனே (அ)
4. தாஸன்மகாலிங்கம்போற்றும் தாமரைக்கண்ணன்தூதனே
கூடலனுமானேயுன்னை கும்பிட்டேன்கண்ணபுரத்தில் (அ)

---

7. புரேவஸாமையா என்ற மெட்டு.

இராகம் கௌரிமனோகரி—சதுர்ஜாதி திரிபுடை.

பல்லவி.

சௌரிராஜனே சரணமடைந்தேன்—உனை (சௌ)

அனுபல்லவி.

சரணமடைந்தேன்சௌரிபெருமானே
வரமருள்வாய்நீ வைகுந்தவாஸனே (சௌ)

சரணம்.

கண்ணபுரமாது கணவனானவா
விண்ணவர்கள்போற்றும் விமலசோரூபா
சொன்னேன் மகாலிங்க தாசன் துயர்நீக்கி
வண்ணனே எனக்கு வரமருள் தேக்கி (சௌ)

---

8. இந்துஸ்தான் ஆயேசய்யான் என்ற மெட்டு.

இராகம்—பியாக்கு—தாளம்—ஆதி.

1. திருக்கண்ணை யுந்தனே யெங்குந்தேடி
தியங்குரேனோராஜா
சில்லரைதெய்வங்கள்
ஆசையையான்விட்டேன்
தினமும்முனைதொட்டேன்
திருவடிபணிந்தேன்
திரமுடன்துணிந்தேன்
திருவடியே—தினமடியேன்
தினமடியேன்—ஓ ராஜா (திரு)

2. எந்தனைரக்ஷிப்பதென்று கைகொடுப்ப
திருவே தருணமையா
உந்தனைத்தொழவே
உருதிகொண்டதினால்
உத்தமபரந்தாமா
சித்தங்கலங்கானேமா
உற்பன ஸ்ரீராமா
ஒருமையுடன் யுனதுதிரு
மலரடியை நினைவுற்றேன் (திரு)
3. மகிழ்ச்சியாய் நானுந்தனைத்தேடி
மகாலிங்கதாசன்நாடி
மாதவா வந்தேனே
மகிபனேயெங்கோனே
மரவுரிதரித்தோனே
மலரடிபணிந்தேனே
மங்கையர்கள் ரூபனே
மாசிலாமாமணியே
மரகதமேமாணிக்கமே (திரு)

---

9. அம்பாள் மதுரை மீனாக்ஷி யென்ற மெட்டு,
ராகம் தேசிகதோடி தாளம் ஆதி.

1. திருக்கண்ணபுரம் வளர்வோனே உன்
காலடி பணிந்தேனே சீமானே
கருணை புரிவாய் தானே
கர்ம மகற்றுவோனே (திரு)
2. கெருட வாகனமேறும் சௌரி ராஜா
வந்தேனுனைக்கோரி யென்முன்
வந்தருள் புரிதேறி
வரதா யெனைப்பாரீர் (திரு)
3. பெற்ற தந்தை தாயும் நீயே உனை
தவிரவேறில்லையே யெங்கும்
தானாய் நிறைந்தாயே
தருண மருள்வாயே (திரு)
4. ரெங்க தாஸன் மகாலிங்கம் கோனே உனை
தஞ்ச மென்றடைந்தேனே யெந்தன்
சஞ்சலம் தீர்ப்போனே
சௌரி ராஜனே (திரு)

10. ஆறுமுகவடி வேலவனே யென்ற வர்ணமெட்டு.

1. கண்ணபுரமாது கணவனுனவா
சாக்ஷி நீ தாராயோ உனை
கண்டு தொழுதுநான் தொண்டூழியஞ்செய்ய
கருணை புரிவாயே
2. ஆண்டாள் பத்மனி ஸ்ரீதேவி பூமிதேவி
ஐவருக்கும் கணவா இந்த
அகில மெங்கும்புகழ் அனுமார்தனக்கு
ஆசீர்வதித்திட்டவா
3. அண்டர்கள் போற்றிடும் தொண்டர்க்கு தொண்டர் நீ
ஆதிமூலனே உனை
அண்டிவந்தேன் யெனை வேண்டிவரமளித்
தருள் தா கோனே
4. ஆதித்தவன் குலத்திலமர்ந்த
அரிகேசவா யெனக்கு நீ
சோதிக்காமலெந்தன் துன்பத்தைநீக்கினுல்
கோடி புண்ணிய முனக்கு
5. தாஸன்மகாலிங்கம் சாஷ்டாங்கமாக
சரணமடைந்தேனுனை நின்
தஞ்சமென்றேன் வரம் வஞ்சகமில்லாமல்
தந்து காத்தருளு மெனை

---

11. இந்துஸ்தான் சுந்தரபியாரிபோகோ என்ற மெட்டு.

இராகம் பியாகு தாளம் ஆதி.

பல்லவி.

சௌரிராஜனே என்மேல்கிருபைசெய்யவேணுமே (சௌ)

அனுபல்லவி.

கிருபைசெய்யவேணுமேகிருபைசெய்யவேணுமே. (சௌ)

சரணம்.

1. ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஐயாசவுரிராஜனே
அண்டர்முனிவர்கள்போற்ற கண்டுமெகிழ்ந்தோனே (சௌ)
2. உனைவிடவேரேகெதி உற்றதுணையாருமில்லை
எனையாதரித்து எந்தன்மிடி துயர்தீருமதொல்லை (சௌ)

3. பாதம்பணிர்தேன்பக்தன்—மகாலிங்கதாசன்போற்றும்
பக்திக்கிறங்கியின்ப—அருள்வரமதைசாற்றும் (சௌ)

---

12. பக்ஷமிருக்கவேணும் மன்னவா என்ற மெட்டு.

இராகம் காபி தாளம் ஆதி.

பல்லவி.

திருக்கண்ணபுரத்தனில் வளர்வோனே உன்
திருவடிதந்தாள் ஸ்ரீமானே

அனுபல்லவி.

1. கருத்துடன்உந்தனை காணவந்தவர்க்கு
கார்க்குப்பத்மனிநேயா கருணைகண்ணா எனை
பார்த்துவரமளிக்க வேணுமய்யா (திரு)

2. ஆண்டாள்மணாளா பாண்டவர்சகாயா
அண்டிடும்போர்க்கு ஸ்ரீ மாயவனே நீ
வேண்டிவரமளிக்கும பெருமானே (திரு)

3. பக்தவிஜயா பகவத்கீதா
பாடவகையறியா பாலன்நானே எனை
பாதுகாரும் திருக்கண்ணனே (திரு)

4. எந்தன்மேல்உமக்கு என்னாளும்பக்ஷம்
இருக்கவேணும்மகா லிங்கதாசர்க்கு கிருபை
சுரக்கவேணுமசௌரி ராஜா எனக்கு (திரு)

---

13. மாதாடபாரதேனோ என்ற மெட்டு.

இராகம் கமாஸ் தாளம் சாப்பு.

பல்லவி.

திருக்கண்ணபுரத்தில்வளர்
சௌரிராஜனே (திரு)

அனுபல்லவி.

திருவே என் செல்வமே தேவருக்குள் தேவனே (திரு)

சரணம்.

1. கல்லைப்பெண்ணாக்கியோனே
கபடசூஸ்திரத்தானே
தொல்லைமிடியகற்றும்
சுவாமிசௌரிராஜனே (திரு)

2. பாண்டவர்க்கனுகூலா—பக்தர்கள்பணிசீலா
ஆண்டருள்வாயெந்தனை—ஐயாசௌரிராஜனே (திரு)
3. தாஸன்மகாலிங்கம—சரணமடைந்தேன் தங்கம
சேசன்அர்ஜுனனுக்கு—வாசன்சௌரிராஜனே (திரு)

---

14. வரமுலசகிபுரேசுடனீ என்ற மெட்டு.

இராகம் கீர்வாணி தாளம் ரூபகம்

பல்லவி.

என்மேல் தயைபுரிவாய் ஐயா
எந்தன் சௌரிரா—ஜா (என்)

அனுபல்லவி.

தந்தருள்வீர்—வரமெனக்கு ரீ
தாஸன்மகா—லிங்கத்திற்கு (என்)

சரணம்.

தென்டகாருண்யா உனை
தேடிவந்தேன் பாடிநானே
உன்னையேநான் கெதியென்றேனே ரீ
உல்லாசராஜசௌரி (என்)

---

15. இந்துஸ்தான் அச்சாமோரிலாகீசே என்ற மெட்டு.

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி.

பல்லவி.

பக்தர்கள் நிதம்கொண்டாடும் பாறளந்தோனேமாயவா
மாயவா—ஹரி—கேசவா (பக்)

சரணம்.

1. சித்தமுடனுந்தனை தெரிசித்தவர்க்குவினை
தீர்ப்போனே—காப்போனே—வாகோனே-சீமானே (பக்)
2. விண்ணவர்கள் தாள்பணியும் விமலசொரூபனே
விண்யா—காருண்யா—ஜெயநண்யா—நீபுண்யா (பக்)
3. மாயவலையில்சிக்கி மயங்கவிடாதேயென்னை
மறுப்பாயே-தடுப்பாயே-நாமனைக்கண்-ணளித்தாயே (பக்)
4. இங்கீர்த்ததாசன்மகா லிங்கம்தமிழ்தனக்கு
இயல்வோனே—வருவோனே-திருச்சௌரி-ராஜனே (பக்)

16. இந்துஸ்தான் தஸ்குமாரேது ரேகுவாரு என்ற மெட்டு.
இராகம் தேசிகதோடி தாளம் ஆதி.

பல்லவி.

வருவாய்கெருடன்மீதேறி
வரதராஜனே—சுவாமி. (வரு)

அனுபல்லவி.

வரதராஜனே—சௌரிராஜனே—ஸ்ரீமானே கோனே (வரு)

சரணம்.

1. தீராய்எந்தனுடைய மாராய்வினைகளை நீ
தீவீரமானஸ்ரீ சௌரிபெருமானே (வரு)
2. அன்பர்களுக்குநல்ல இன்பம்தரும்செளரி
ஐயாஉந்தனையானும் மெய்யாகவே நம்பினேன் (வ)
3. வையகம்தனிலே மெய்யானதெய்வம் நீ
யென்றும்எனக்குஅருள் கண்ணபுரத்தைவிட்டு (வ)
4. பாரளந்தோனேயுனை பாடிப்பணிந்தேனெனை
பக்தன்மகாலிங்கத்திற்கு பக்ஷம்வைத்தருள்புரிய (வ)

---

17. பூமிமேச்சிடு அண்ணுமலை என்ற மெட்டு.

1. திருக்கண்ணபுரந்தனில்வளர் சௌரிராஜனை
தேடியே—மனம்நாடியே—வந்தேன் ஓடியே எந்தன்
தீவினைகளைநீ தீர்த்துஎந்தனைகாத்
திடுவாயே—அருள்—புரிவாயே
2. கபீர்தாசருக்கு காக்ஷிகொடுத்தமெய்
காரணா—பரிபூரணா—மிகுதாரணா உந்தன்
காலடிபணிந்தேன் கருணைபுரிவாய்என்மேல்
மோகனா—கெருட—வாகனா
3. துளசிதாசருக்கு துன்பத்தைநீக்கிய
தூய்யனே—மலர்கையனே—ஜெகமெய்யனே உந்தன்
தூய்யமலரடியை ஐயாநிதம்தொழுதேன்
அடியனே—நான்—சிறியோனே
4. வையகம்புகழோங்கும் திருக்கண்ணபுரந்தனில்
வாசனே—ஜெகதீசனே—பிரகாசனே நின்
பாதமதையேநான் நேசமுடனேகாண
வந்தேனே—ஆசை—கொண்டேனே

5. பக்தன் மகாலிங்க தாஸனை உன் கண்ணால்
பாரு மையா-வினை தீராயோ-சேவை தாராயோ-என்னை
பாதுகாத்து உந்தன் பாதம் தெரிசனம்
தருவாயே-வர---மருள்வாயே

---

18. காவடிச்சிந்து.

பாதிராத்திரி வேளையில் என்ற வர்ணமெட்டு.

1. மன்றுளார்திருக் கண்ண ராஜனே
வந்திமே யெனையாளாய் ஸ்ரீ
மாயவா கெடுகாளாய் உனை
மறக்கவில்லைநீ கேளாய் சற்று
மனதுவைத்துநீ உனது கண் ணோக்கியே
மன்னவா கலிதீராய்
2. பாண்டவர்க்கு நீ வேண்டியே சென்று
ஆண்டுவந்த குணாளா பதி
மீண்டு வந்தெனை யாளாய் கோ
தண்டமேந்தும் பொற்றாளா புவி
அண்டரும் நவகண்டரும் தொழும்
ஆண்டவா துயர்தீராய்
3. மன்னவா எந்தன் முன்னேவா திருக்
கண்ணவா எனைக்காரும் தார்
வண்ணவா வினை தீரும் கின்
கண்திறந் தெனைப்பாரும் ஸ்ரீ
மாயவா ஹரி கேசவா தாசன்
மகாலிங்கத்திற்கருள் தாவா

---

19. காவடிச்சிந்து.

தெள்ளுதமிழ்குதவும் சீலன் என்ற வர்னமெட்டு.

1, பச்சைநிற மேனியனே வருவாய் பந்த
பாசங்களை போக்கி முத்தி தருவாய் ஐயா
பங்கயக்கண்ணனேயுனை பாடவகையறியாத
பாலன்-தவ-சீலன்
2. வரதா வரந்தரவேணும் எனக்கு
வந்துதெரிசனம் தரத்தானும் கெருட
வாகனமேறியே நிதம போதனை செய்யாமலெனைக்
காரும்-துணை-வாரும்

3. சாரதியே கருணாகரநிதியே உனை
சரணமடைந்தேன் லோக பதியே எங்கும்
சர்வபரி பூரணமாய் கர்மவினைகளைப் போக்கும்
துரையே-ராஜ-இறையே

4. ஏழையின்மீது கருணைவல்லையா உனக்கு
எள்ளளவேனுமிறக்கம் மில்லையா ஐயா
எனக்கு வரமளிக்க உனக்கு சித்தர்கள் கூட்டச்
சள்ளையா-இது-தொலலையா

5. தாய்மொழி இனைபிரியா ராமா உன்
தந்தையை தளர விட்ட பூமா உனை
தஞ்சமென்றேன் கொஞ்சங்கூட நெஞ்சமிறங்காதென்னை
வாதா-இது-சூதா

6. கார்மேகா உந்தனையான்காண திரு
கண்ணனே உன் ஒளி எங்குந்தோண நின்
தஞ்சமென்றேன் மகாலிங்க தாஸனை யாண்டிடு
வீரே-புவி-நேரே

---

20. திருப்புகழ்.

மலடிவயிற்று மகன்போலே என்ற மெட்டு.

1. திருக் கண்ணபுரத்தில்வளர் பெருமானே உன்
திருவடிதந்தாள் சிமானே நின்
கிருபை புரிந்தருள் பூமானே நித்ததிதானே

2. அனுமன்தனக்கு ஆயுள்தந்தோனே எனை
ஆதரித்திடுவாய் நீங்காமே நரசிம்ம
அவதாரமாய் வந்தோனே பாதம்பணிந்தேனே

3. இரண்யனை சம்மாரம் செய்தோனே நீ
இருக்கும் இடந்தேடி வந்தேனே உன்
திருக்கூத்தின்ன தென்றறியேனே ஹரிபெருமானே

4. ராவணனை சம்மாரம் செய்தோனே மூல
ராக்ஷதரை கருவறுத்தோனே புவியில்
ராமனாய் வந்தவதரித்தோனே மாவ்ரியோனே

5. பக்தர்கள் சித்தர்கள் பணிவோனே உன்
பாதத்தை என்னாளும் மறவேனே சிறு
பாலன் மகாலிங்கம் தொழுதேனே சௌரிபெருமானே.

21. கலி விருத்தம்.

தண்டகாருண்யா சபையலங்காரா சௌரிமன்னா
அண்டர்கள்போற்றும் தொண்டர்க்குத்தொண்டா ஆதிமூலா
ஆண்டாள் தன்னையா ஹரிகோதண்டா அழகாண்ணா
பண்டரிநாதா பாண்டவர் தூதா பாரளந்த ஸ்ரீராமராமா.

---

22. என்மேல் இந்தவர்மமேனையா என்ற மெட்டு.

இராகம் தோடிதாளம் சாப்பு.

பல்லவி.

ஏழைமேல் யிந்த கோபமேனையா
பத்மணி நேயா. (ஏ)

அனுபல்லவி.

திருக்கண்ணபுரம் வாழுமையா
தேவர்தொழும் பொற்பாதத்துய்யா
கெருடன்மீதேறி ஆண்டானையா நீ
கேழ்க்கவில்லையோ-பார்க்க-வொண்ணாதோ (ஏ)

சரணம்.

1. மாயவா ஹரி கேசவா எனை
மயங்கவிடாதீர்
மாதுபூமிதேவிசகிதம் மைந்தனைகாரீர்
வாதுசெய்வது ஏனோஎந்தன்மேல்
வானவர்முதல் யாவரும்போற்றும்
வாசனமேறி ஸ்ரீ தேவியுடன் நீ
வந்தாளும்—எந்தனைநீர்—தந்தாளும்—வரமெனக்கு (ஏ)

2. இந்தவேளைவந்துதவிசெய்
தண்டகாருண்யா
உந்தன்பாதத்தை எந்நாளும் உறுதிகொண்டேனையா
உந்தன் தாசன் மகாலிங்கம்துதி
வந்துதவி புரியவேணும்
சிந்தையிலுன்னை எந்நாளும் நீ
தெரிசித்த-வர்க்குநீ-பரிசித்த-வரமருள் (ஏ)

23. வேலவா வடிவேலவா என்ற மெட்டு.

இராகம் தேசிகதோடி தாளம ஆதி.

பல்லவி.

ராஜனே சௌரி ராஜனே என்னே
ஆளாய் ரெகு ராமனே (ராஜ)

சரணம்.

1. ஆலிலைமேல்பள்ளி யன்புடன்கொண்டவா
ஆனந்தரூபனே ஆனந்தரூபனே
ஆதித்தவன்குலதந் லபாந்தரெகுராமனே (ராஜ)

2. பனிரெண்டாழ்வார் பணியம்பங்கையர்கண்ணா
பாராபவிருப்பது பாராபவிருப்பது
பாபமோ நான்செய்த சாபமோவறிகிலேன் (ராஜ)

3. ஆனாலுமிந்தபடி சோதனைசெய்வது
யார்செய்தபோதனே யார்செய்தபோதனே
ஆதிசேசவன்படி மீதிலிருக்கும் சௌரி (ராஜ)

4. என்னைத்திறக்கிந்தகோபம் யிதிலுனக்கென்ன லாபம்,
ஏழையான் படுந்துயரம் ஏழையான் படுந்துயரம்
ஏற்கலையோ உந்தன்செவி கேட்கவிலையோ சௌரி (ராஜ)

5. மன்னவனே யுனக்கிது மாயவனே யாகாது
சிந்தனை செய்வதேது சிந்தனை செய்வதேது
சந்தரமு முந்தன் தாசன் மகாலிங்கம்மீது (ராஜ)

---

24 கலி விருத்தம்.

அண்ணாவுன் பொற்பாத அடியையான் காணுதற்கு
தினம் அலைகிறேன் தினகரனே திருவருட்கார்
வண்ணா மலரடிக்கு யான்வந்து வழிபாடுசெய்து
கண்ணாவுந்தனை நினைந்து நினைந்துருகி கலங்கிறேனே

---

25 தையலே உனை நினைந்து நினைந்துருகி என்றமெட்டு.

இராகம் கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி

மாயவா யுனை நினைந்து நினைந்துருகி
மயங்கிறேனே ராஜா (மாயவா)

அனுபல்லவி

வையகந் தனிலே மெய்யானதெய்வம் நீ
அய்யன்சௌரிராஜ துய்யன் ஸ்ரீனிவாச (மாயவா)

சரணம்.

1. வாரும் எந்தனைக்கண்
பாரும் உந்தனையான்
கோரும் வரந்தரவே
நீரும் வந்துதவி
தாரும் கிருபைவாரி கூறும்திரு வாய்மொழி
காரும் கருணை கண்ணால் பாருந்திருக்கண்ணனே (மாயவா)

2. யீசா யிங்கிர் தப்பிர
காசா அடியார்விஸ்
வாசா உன்னித உல்
லாசா காரசௌரி
ராஜா எந்தனைநீரும் மோசம்செய்யாமல் தானும்
பாசம்வைத்தெந்தனையுன் நேசந்தாளும் சௌரி (மாயவா)

3. யேது எந்தன்மேல்
வாது செய்வதா
காது நீரும்மெத்த
சூது காரணிப்போது
தான் தெரிந்துக்கொண்டேன் தய்யா வரதராஜா
தந்தையுந்தனுக்கிது விந்தையல்லவோ சுவாமி (மாயவா)

4. தேடி மணமகிழ்ந்து
நாடி ஐம்புலனொன்றாய்
கூடி துதிசெய்தனே
பாடி யேனித்தகி
மோடிசெய்கிறாய் சுவாமி தேடிகல்யாணி ராகம்
பாடியும் எந்தனை நீர் வேடிக்கை செய்யலாமோ (மாயவா)

5. சிங்கம் சௌரிராஜ
தங்கம் தாசன் மகா
லிங்கம் பகைவர்களைப்
பங்கம் செய்வதுதா
ணங்கம் செய்திடும்சௌரி மங்கையர் கண்ணேயுனை
தங்கமென்று நினைந்தேன் பொங்கவாமளிக்கும் (மாயவா)

26. நடந்ததேன்ரு சொல்லம்மா என்ற மெட்டு.

இராகம் நாதநாமகிரியை தாளம் ஆதி.

பல்லவி.

திருக்கண்ணபுரவாசா உன்
திருவடிதாயீசா (திரு)

சரணம்.

1. தேவர்க்கடியாள் வீட்டில் தினமும்புகுந்த அர்ஜ
தீக்ஷகனையங்கு போனவனை
சித்தம்தெளிய முத்திகொடுத்திட்டவா
அத்திக்கருள் செய்த ஆண்டாள் பத்மணிதேவா (திரு)

2. சோழராஜனுக்கு பயந்த அர்ச்சகனை
சோதனைசெய்யாமல் சாதனையாக
சௌரிவளர்ந்திட்டவா தாமரைக்கண்ணு
தஞ்சமென்றபேரை கொஞ்சிக்குலாவுவண்ணு (திரு)

3. அர்ச்சகன்தனக்கு வாபத்தைத்தீர்த்த
ஆனந்தனேசௌரி பெருமானே
எந்தனுக்குஅந்த ரகசியம்தெரியாமல்
யின்னமட்டும்யான் யேங்கிபுலம்பலுற்றேன் (திரு)

4. உன்னையேநினைந்து வுருகுதேநெஞ்சம்
உள்ளபடியிப்போ காளயுக்திபஞ்சம்
நேர்ந்ததுனாலே நெல்லுகுறைந்ததாலே
நினைந்து நினைந்துருகி வாடுறேனே மண்மேலே (திரு)

5. பஞ்சத்தை நீக்கும் வஞ்சகமில்லாமல்
பார்தனிலேயதை யொழிப்பாயே
புஞ்சை நஞ்சைகளெல்லாம் புல்லாய் முளைத்திருக்க
நெஞ்சமுருகுதையா நிவர்த்தி செய்யும் கண்ணையா (தி)

6. மாயவலையில்சிக்கி மயங்கவிடாதேயென்னை
மறுப்பாயே யதை தடுப்பாயே
மன்னனும் காமன் மன்மதனையளித்த
மாயவனேமகா லிங்கதாஸன்கோவிந்த (திரு)

27. சோமசேகரனருளும் பாலா வேலா என்ற மெட்டு.

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி

கண்ணிகள்.

இன்னமும் மனமிரங்காதென்ன வாதா வரந்தா
எத்தனைநாட் செல்லுமந்தை சொலவாய் நீதா (இன்)

1. கத்திகத்தி யுனையழைத்தேன் நானே நானே உன்
காதிலின்னம் விழவிலையோ கோனே கோனே
பக்தர்கள் கோஷ்டியிலுனை பாடினேனே நின்
பாதமென்றுனையடைந்தேன் மானே நானே (இன்)

2. தேவர்முனியாவர் போற்றும தேவே கோவே உனை
தேடியாண்டியங்கிறேன் முன் வாவே தாவே
தந்தைதாய் குருதெய்வமும நீயே வாயே உனை
தவிரயெனக்கு பற்றமதெய்வம் வேறிலலையே (இன்)

3. நித்தியமும் நின் பஜனைதானே நானே நின்
பகதியுந்தவே யாகும் பாடினேனே
சத்தியமாய் யுனையடைந்தேனே நானே நீ
அத்திக்கருள் செய்தசீமானே கோனே (இன்)

4. தாமதம செய்யலாகுமா செளரி ராஜா ரெங்க
தாசன் மகாலிங்கம போற்றும ஸ்ரீனிவாசா
தண்டகாருண்யத்தில வளா வோனே தேனே முன்
தாமதிக்காமலவாரும் சீமானே கோனே (இன்)

---

28. ஐயாபழனிமலைவேலா என்ற மெட்டு.

ராகம் சகானா தாளம ஆதி.

கண்ணிகள்

1. அப்பாகண்ணபுர காதா
அடியேன்மேல் இன்னமும் வாதா
ஆலிலைமேல பளளிகொண்ட நீதா உனை
அண்டிவந்தேன்வாரும் தாதா (அப்)

2. வாகைபெருமாள்மீ தேறி
வரவேணும் கமலக்கண் தாரி
அனுதினமும் அடியேனுனைக் கோறி நா
னலைந்து வாடுறனைய்யா பாரா (அப)

3. இகபரம் இரண்டிற்கு   மீசா
இருவினையகற்றும விஸ்   வாசா
மருமலர் சௌரி   ராஜா   மகா
லிஙகும முத்தமிழ்சொல்   நேஸா   (அப்)

---

29 தோட்டு தாலி கட்டின பூமா என்ற மெட்டு.

இராகம் பியாகு தாளம் ஆதி.

1. சௌரி ராஜா உந்தனைத்   தேடி   இந்த
ஜகம முழுதிலும் கொண்   டாடி
வந்தேனே உந்தனையான்   காடி
வாரா தேனோ   மோடி
கூறினேனே   பாடி

2. துரௌபந்தை மானம் கார்த்த   ஈசா   நீ
துயில கொடுத்தீந்த விஸ்   வாசா
துவாரகாபுரியில வாழும்   நேசா
துன்பம் மகற்றும்   பாசா
துணைவேறில்லை   ராஜா

3. நீசில்லாப் பயிரானேன்   நாதா   உனை
நினைந்துவாடுகிறேன் வி   னோதா
நிலையில்லா பராபானேன்   பாதா
நின்னம என்மேல்   வாதா
நிகரிலலா பொற்   பாதா

4. மனம மகிழ்ந்து இங்கு   வாரும்   தாலவன்
மகாலிங்கம தமிழ்   காரும்
மயங்கி வாடுகிறேன் எனை   நீரும
மறவா வரம   தாரும்
உந்தன் பாதத்தில்   சேரும்   (சௌ)

---

30. பாசுபதம் போலே மதன் பாணம் தைக்குதடி என்ற மெட்டு.

இராகம சுருட்டி தாளம ஆதி.

1. தஞ்சமென்றுனை யடைந்தேன்
சௌரி ராஜனே   யுனை
சார்ந்து வந்தேனே   என்மேல்
தயவுகூர்ந்து—உனதுபாத—தரிசனந்தானே—நித்தநிதம்

2. தந்திடுவீர் தாசனுக்கு
தயவுகூறுமே கடைக்
கண்ணால்பாருமே சௌரி
தாமரைக்கண்ணனே—சரணமடைந்தேனே—சஞ்சலம் தீர்
ப்போனே-திரு

3. கண்ணன் சௌரிராஜனே யுனை
காணவந்தேனே அருள்புரிவாய்
எங்கோனே ஸ்ரீ
கண்ணபுரமாது-சகிதம்மெனக்கு—காக்ஷிதருவோனே—
சீமானே

4. ஏழையின்மீது கருணை
யேன்வராதையா உனையன்றி
வேறில்லையா என்மேல்
ஏதோசோதனை-இன்னும்சாதனை-இருக்கக்கூடாதையா-
கண்ணையா

5. காணவந்த தாசன்மகா
லிங்கம்ரூபனே மா
யாவதாரனே எனக்கு
கருணாகடாக்ஷம்-கண்ணினால் மோக்ஷம்-தந்திடுங்கோனே-
கானே (தஞ்சம)

---

31. கலிவிருத்தம்.

கடலினில்பள்ளிகொண்ட கார்மேகா உந்தனையான்கண்டுதொழ
வடகடலோடி வாடுகிறேன் உன்வடிவைக்கண்
டிடவும உனைபோற்றி கொண்டாடவும் பகருவாய்நீ
திடமுடனுந்தனை தெரிசித்தவர்க்கு சித்திதருங் கண்ணனே

---

32. பாராமுகமேனையா என்ற வர்ணமெட்டு.

இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி.

பல்லவி.

கண்ணா உன் கண்ணால் பாருமே சௌரிராஜ
மன்னா என் வினை தீருமே (கண்ணா)

சரணம்.

1. செந்தாமரை பாதத்தில் வந்துன் சரணடைந்தேன் நீ
வந்தாதரித்து நீரும உந்தன்
அருள் பெருகி காதா
கோரிடும் வரம் தாதா
குருவே சௌரி காதா
உனக்கு தெரி யாதா
என்மேலின்னம் வாதா (கண்ணு)

2. சீரோங்கும் கண்ணபுர செல்வனே சௌரிராஜா நீ
தீரனே எழைமுகம் பாராமல்
இருப்பது சூது
உலகத்துக்கா காது
ஏனோ என்மேல் வாது
உந்தனுக்கா காது
எந்தனுக்கிப் போது (கண்ணு)

3. உன்னையே கெதியென்று ஒடிவந்தேனே யின்று நீ
மன்னவா யெந்தன் முன்னம்
வாதுசெய்யாமல்வரு வீரே
வரமருளும் நீரே
பந்தபாசம் தீரே
மைந்தனைக்கண் பாரே
உன் பாதத்தில் சேரே (கண்ணு)

4. வேறு துணையுமில்லை நீருமெந்தன் தொல்லை நீ
கோரும் வரந்தருவீர் தாஸன்
மகாலிங்கம் நானே
உந்தனையும் கோனே
விட்டுவி டேனே
கண்ணபுரத்தானே தானே
என்னையாள் நீ மானே (கண்ணு).

---

33. முத்துக்குமரய்யனே என்ற வர்னமெட்டு.

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

பல்லவி.

கார்க்கவேணும் ராஜா
கண்ணபுரவாசா எனை (கார்)

சரணம்.

1. பாண்டவர்க்கு நீ வேண்டியே சென்று
ஆண்டு வந்த வாசா யுத்தத்தை
மீண்டுவைத்த நேசா துரோபதை
மானபகாத்த ஈசா ராஜா (கார்க்க)

2. தந்தை சொல்லைப்பழிக்கவேவனம்
சென்றசௌரி ராஜா வாலியை
கொன்ற ஸ்ரீநி வாசா உந்தனை
அண்டிவந்தே னீசா ராஜா (கார்க்க)

3. இராவணேஸ்வரன் இராக்ஷதர் முழுதும்
இரக்கசெய்த தீரா உந்தனை
மறக்கவில்லை சூரா இருவினை
இரணடுக்கும்-செம் பீரா வீரா (கார்க்)

4. சுக்ரீபனுக்கு பட்டம் சூட்டிய
சுகிர்தகுண சீலா அயோத்தி
சென்ற தசரதர் பாலா சோம
சுந்தரர்க்கு தோழா எனை (காக்க)

5. முத்தி தந்திட வெற்றி பெற்றிட்ட
மோகனசௌரி நாதா ஏழையின்
மேலின்னம வாதா உந்தன்
முன்னம வந்தேன் பாதா வாதா (கார்க்க)

6. தற்காலம் காகூரில் சஞ்சரிக்கிற
ரெங்கதாசன் நேசா மகா
லிங்கம் போற்றும் வாசா எந்தன்
சஞ்சலந்தீர் ராஜா வாசா (கார்க்க)

---

34. பேயாண்டி தனைக் கண்டு நீயேண்டி என்ற மெட்டு.
இராகம் எதுகுல காம்போதி தாளம் சாப்பு.

பல்லவி.

திருக்கண்ணபுரந் தன்னில் இருக்கும் சௌரிராஜனே
திருவடிபணிந்தேனே (திரு)

அநுபல்லவி.

தினமும் உனைத் துதித்தேன் தினகரா கரங்குவித்தேன்
தீரனே எளைழக்கிரங்கி தருமாதுடன் வாகோனே (திரு)

சரணம்.

1. எந்தநேரமும் முந்தன் இணையடிக்காளானேன் •
எந்தனைக்கார்த்தருள்வீர்
உன்பாதம் கெதியென்று உறுதிகொண்டேனே னன்று
வந்தெனை ஆதரித்து வரமருள்வா யின்று (திரு)

2. பந்தபாசங்கள் யாவும் பறந்தோட செய்வாய்உன்
பாதமே கெதி யென்றேன்
பாருக்குள் எந்தனை நீர் சீர்திருத்திவைப்பதுன்
பாரமோ உனக் கிது தூரமோ அறிகிலேன் (திரு)

3. நானோ சிறுவனையா நம்பிவந்தேனுந்தனை
நாடி ஓடி நானே
வாடிநானிருக்கையில் மோடிசெய்வதழகோ
பாடி காம்போதிராகம் தேடித்தியங்கிறேனே (திரு)

4. தாசன் மகாலிங்கம் சாற்றும் தமிழ்க்கிரங்கி
தமியேனை யாட்கொள்வாய்
தஞ்சமென்றேன் நீரும் வஞ்சக மில்லாமல்
தந்திடுவீர் உந்தன் தரிசனம் மைந்தனுக்கு (திரு)

---

35. சிக்கல் சிங்காரவடி வேலா என்ற மெட்டு.

இராகம் சுருட்டி தாளம் ஆதி.

1. திருக்கண்ணபுரம் சௌரி நாதா உனை
தேடித் தியங்குறேன் பொற் பாதா
திருவே என் உருவமே தேவர் போற்றமுதமே
தினமும் உன்பா தமே திருவடி தஞ்சமே (திரு)

2. ஆலிலைமேல் பள்ளிகொண்ட நீதா அடி
யேன்மேல் யின்னமும் வாதா
அண்டிடும்பேரை நீ ஆண்டுகொள்வாயே நீ
ஆனந்தரூபன் நீ அகிலம்படைத்த நீ (திரு)

3. மாய வலையில்சிக்கி நானே என்
மதிகுலைந்தலைகி றேனே
தாய்வயிற்றிலி ன்னம் தனையன் பிறக்கா வண்ணம்
மாயவா ஜெக தீசா மகாலிங்க தாசன் நேசா (திரு)

---

36. மஞ்சுநிகர் குந்தளமின்ன என்ற மெட்டு.

1. இன்னமும்சோ தனையாகுமா
ஏழையின்மீது—தாழவொண்ணாது
ஏற்குமோ இதுவும்ஞாயமா உனை
எத்திசையர்களும்—பக்திபண்ணியே—நித்தம்பூசைகள்—
ஏறும்கெருட வாகனமீதில் [செய்கிறார்களே
தாசன்தனக்கு—மோசம்வாராமல்
எந்தனுக்குன் னருள்தாமனதில்.

2. என்னத்திற்கு இத்தனைகோபம்
வருவதேனோ—சிறுவன்மீதில்
ஏற்குமோ உந்தனுக்குபாவம் உனை
எப்பொழுதுமே—பக்தியாகவே–பஜனைசெய்கிறேன்—சத்
எந்தன்மேல் மனமிறங்கையா [தியமாக
திருக்கண்ணையா—இதுதொல்லையா
ஏழையென் பாவங்கள்தீரய்யா.

3. அர்ச்சகன் ஆபத்தைதீர்த்தஉன்
ரூபத்தைக்காண—பாவத்தைவிட
ஆசைகொண்டேன் பாசம்வைத்தேமுன்
ஐவர்தேவி—மணாளாமகா—லிங்கதாசனுக்—கருளுறைத்
ஆறுதலை சொல்விடுவாயே [திட
ஆபத்தைநீக்கி—கோபத்தைபோக்கி
அய்யாதிரு வாக்கருள்வாயே.

---

37. கலிலோ ஹரிஸ்மரணமோகட்டியே என்ற மெட்டு.

இராகம் காராயணி காப்பி தாளம் சதுர்ஜாதி திருபுடை.

பல்லவி.

கண்டேன்திரு கண்ணன் சௌரிராஜ
மன்னனையானுமின்று—ஆவலுடன் (கண்)

அநுபல்லவி.

விண்டேன் என்பாவமுழுமையும்
கொண்டேன்ஹரிதியானத்தை—விரதமுடன் (கண்)

சரணம்.

1. ஆண்டாள் பத்மணிசமேதராய்
அமர்ந்ததிருக்கண்ணனை—ஐவருடன்
இருக்கும் சௌரிராஜனை
கண்டேன் என்கவலையை விண்டேன்
மண்டேன்மாதர்மையலில்—யானுமின்று (கண்)

2. அர்ஜுகன் ஆபத்தைதீர்த்தசௌரி
ரூபத்தையானுமின்று—அன்னவர்
பாதத்தை யானும்கன்று
கண்டேன்பரமானந்தம் கொண்டேன்
உண்டேன் அவர்தீர்த்தத்தை—யானுமின்று (கண்)
3. பந்தபாசங்களை போக்கினேன்
பரமானந்தமடைந்தேன்—சௌரிராஜன்
தியானத்தைமேல் கொண்டேன்
கொண்டேன்ரெங்கதாசன் மகாலிங்கம்
கண்டேன் திருக்கண்ணனை—யானுமின்று (கண்)

---

38. நாதன்வரவுங்காணேன் என்ற மெட்டு.
இராகம் தேசிகதோடி ஆதி தாளம்.
பல்லவி.
ஆனந்தனேசரணம் அடியேனைகாரு்ர் (ஆன)
சரணம்.
1. கண்ணபுரத்தையனே கபடசூஸ்திரத்தோனே
கண்ணபுரமாதுமெய்யனே—சௌரிராஜனே. (ஆ)
2. சங்குசக்ரமணிந்த சாம்பளவர்ணுயுந்தன்
மங்லகஸ்ரீதேவிலோலனே—சௌரிராஜனே (ஆ)
3. தண்டகாருண்யாவுனே சரணுகெதியடைந்தேன்
ஆண்டாள்பத்மணிகேயனே—சௌரிராஜனே (ஆ)
4. பூலோகம்தானளந்தபொற்பாதா யுந்தனுக்கு
பூமிதேவிசீதேவி—சௌரிராஜனே (ஆ)
5. ஐவருக்கும்கணவா அலைகடற்றுயின்றவா
அன்புடன் துதிக்கலுற்றேன்—சௌரிராஜனே (ஆ)
6. சாயுச்யஞானமுத்தி ராஜசங்கீர்த்தனம்
சாற்றும்தாசனைக்காரும்—சௌரிர:ஜனே (ஆ)
7. பாண்டவர்தயாநிதிபக்தன் மகாலிங்கம்துதி
ஆண்டருள்நீயேகெதி—சௌரிராஜனே (ஆ)

---

39. நொண்டிச்சிந்து.

மனமே மானிடவாழ்வு சதமல்ல மருக்திடும்மாதர்கள் வலையிற்சிக்கி, தினமும்மலைந்து வீணுய் கெட்டு திரிகிரமடமையை விட்டுவிடுவீர், அன்னியர் மாதர்களை நீயும் ஆசை வைத்தாயேயானல மோசம்வரும், கொண்டகணவன் கண்டால் உன்னை கொன்றிடுவான்வாளால் வென்றிடுவான், அழகுள்ள பெண் ணென்று அவளை அடுத்துவிடாதேநீ தொடுத்துவி

டாதே, ஒன்றும்பயனில்லையே அதனில் உழன்றுபார்த்தால் தெரியும் சள்ளையே, அற்பசுகம்தானே இது ஆனாலும் அவர் கள்செய்வதெல்லாம் பெரும்சூது, ஆகையினால் மனமே நம தாண்டவன்திருக்கண்ணாண்ட வனை, பணிகுவாய்நீ நெஞ்சே உந்தன் பாவகர்மங்களெல்லாம் பறந்தோட, திருக்கண்ணபுர த்தையனை தெரிசித்தவர்க்கு சித்தியுண்டும்முத்தியுண்டு நத் தினவர்க்கு, அர்ஜுனன்ஆபத்தை தீர்த்தவன் பத்மனி ஆண டான்ஸ்ரீதேவிஜயவர் மணாளன், கல்லைப்பெண்ணாக்கியவன் எல்லா கருணையும்அவரிடம் திடமுடனே, இருப்பதுமநாம் தெரிந்தும் அன்னவர் திருப்பிடம்தனில்போய் விருப்பமுடன், தெரிசித்தவர்க்கு வரம் உடனே தருபவர்அவர்தான் திருக் கண்ணன், அன்னவர் மகுத்துவத்தை என்னால் அறிந்துரை க்ககூடுமோ சொல்நெஞ்சே, ஆயிரம் நாவுபடைத்த அந்த ஆதிசேஷவனானாலும் கூடுமோ, அப்படிஇருக்கமனமே சங்கீர்த் தனம் அடியனுவியன்றவரை கூறலுற்றேன், பக்திவிஷயபஜனை செய்துநாம் பாடிடுவோம் மனம் கூடிடுவோம், மகாலிங்க தாசன் துதியை நாமும் அடிக்கடிபாடிதுதித்திடுவோம் தந் தின தனதான.

---

40. மங்களம்.

மருகேலரா ஓராகவா என்ற வர்னமெட்டு.

பல்லவி.

சுபமங்களம் ஜெயமங்களம். (சுப)

அனுபல்லவி.

மங்களங்கள்பாடி மாயவனைத்தேடி
துங்கமகற்றும் சௌரிநாதனைக்கொண்டாடி (சுப)

சரணம்.

மங்கையர்கள்லோலன் மாதுசோதைசீலன்
நங்கைஐவருக்கும் நாயன்சௌரிநாதன்
எங்கும்படியளந்த எங்கள்சௌரிராஜன்
தங்குமகாலிங்க தாஸன்போற்று மீசன் (சுப)

வாழி விருத்தம்,

சீர்திருக்கண்ணபுரம் தெண்டகாருண்யம்வாழி
பேர்புகழ்நாகூரில் ரெங்கதிருகூட்டத்தனைவோர்வாழி
கார்பெருகுந்தென்கண்டியூர் கள்வர்கள்மிகவாழி
பார்பெருகும்ரெங்கமகாலிங்கதாசன்பாடிய பாக்கள் வாழிவாழி

சுபம் சுபம் சுபம்.

உ

தேன்கண்டியூர்

ER. மகாலிங்கதாஸரவர்களால் இயற்றிய

ஸ்ரீ பக்திரச அருள்வாக்கு பதங்கள்.

இதன் விலை அணா 4.

இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்.

நாகபட்டணம் புத்தக ஷாப்பு—T. A. சரவணமுத்து பிள்ளை.
நாகூர் புத்தக ஷாப்பு—முத்தையா செட்டியார்.
நாகூர் வெத்திலைக்கடை—ம. வீரப்ப பிள்ளை.
திருக்கண்ணபுரம் கீழவீதி--பெ. நாராயணசாமி சேர்வை.

இவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஓர் ஆச்சர்யம்.

கெருடபக்ஷி

உடன்கட்டையேறிய உத்தம சிந்து.

இதன் விலை பைசா 3.

இதை அவசியம் பார்க்கவேண்டியது.

இதுவும் மேல்கண்டவர்களிடம் கிடைக்கும்.

இன்னும் கூடிய சீக்கிரத்தில் நாகூர் ஆண்டவர் பேரில் பக்திரச பதம் வெளியாகும்.

ஓர் வேண்டுகோள் :—

என் உத்தரவன்றி ஒருவரும் இப்புத்தகத்தை அச்சிடாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

☞ ம. வீரப்ப பிள்ளை.